**சரிப்படுத்துதல் செய்ய ஆலோசனை வழங்கும் திட்டம்**

சரிப்படுத்துதல் செய்ய ஆலோசனை வழங்கும் திட்டம் (Adjustment Advisory Program – AAP) மூலமாக தொழிற்சாலைகள் மூடப்படுதல், கம்பனிகள் தங்கள் அளவை சிறிதாக்குதல் ஆகியவற்றை சமாளிக்க உபாயங்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, வேலை வழங்குபவர்கள், தொழிலாளிகள் மற்றும் சமூகங்களுடன் சேர்ந்து, ஒன்டாரியோ அரசாங்கம் வேலை செய்கிறது.

உள்ளூர் சரிப்படுத்துதல் செய்யும் கமிட்டிகளுக்கு நிதி உதவியையும் மற்ற வசதிகளையும் அரசாங்கம் வழங்குகிறது. வேலை தேட உதவி, தொழில் மற்றும் வியாபாரம் தொடர்பான ஆலோசனையும் பயிற்சித் தகவலும், வேலை இழப்பால் ஏற்படும் அழுத்தத்தை சமாளிக்க தனிப்பட்ட ஆதரவும், ஒரு சிறிய வியாபாரத்தை ஆரம்பிக்க நிதி ஆலோசனையும் தகவலும் உட்பட பல்வேறு சேவைகளை பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இந்த கமிட்டிகள் வழங்குகின்றன.

பரந்து பட்ட பொதுசனத் துறைகளில் (public sector) உள்ள பாடசாலைகள் வைத்திய சாலைகள் அல்லது நகர சபைகள் போன்றவற்றில் உள்ள வேலை வழங்குபவர்களுக்கு இந்தத் திட்டம் சேவை செய்வதில்லை.

**என்ன சேவைகள் கிடைக்கப் பெறுகின்றன?**

தொழில் இடத்தில் வேலை இழப்பால் ஏற்படும் பாதிப்புகளை சரிசெய்ய தன்னுடைய வாடிக்கையாளருக்கு நிதி மற்றும் ஆலோசனை உதவிகளை, சரிப்படுத்துதல் செய்ய ஆலோசனை வழங்கும் திட்டம் தருகிறது. தொழில் ஆலோசனை, பயிற்சி, தொடர்பு ஏற்படுத்தல், வேலை தேடுவதற்கான பயிற்சி ஆகியவை உட்பட வாடிக்கையாளர்களின் தேவைகளையும் தகுந்த உதவிகளையும் இனம் காணவும் பெற்றுக் கொள்ளவும் சரிப்படுத்துதல் செய்ய ஆலோசனை வழங்கும் திட்ட ஆலோசகர்கள் உதவுகின்றனர். இந்த செயற்பாட்டில் தொழிலாளர்களும் வேலை வழங்குபவர்களும் முழுமையாக ஈடுபடுவதை உறுதி செய்யவே சரிப்படுத்துதல் செய்யும் கமிட்டிகள் ஸ்தாபிக்கப் பட்டுள்ளன.

**தொழிலாளி அல்லது இடப்பெயர்ச்சி செய்யப்பட்ட வேலையாளுக்கான சரிப்படுத்துதல்**

வேலை இழந்தவர்கள், இழப்பால் ஏற்படும் பாதிப்பை சமாளிக்கவும் தங்களுக்கிருக்கும் தேர்வுகளை மறுபார்வை செய்யவும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை திட்டமிடவும், சரிப்படுத்துதல் செய்யும் கமிட்டி மூலமாக சரிப்படுத்துதல் செய்ய ஆலோசனை வழங்கும் திட்டம் உதவுகிறது. இந்தக் கமிட்டிகள் பாதிக்கப்பட்ட எல்லா தொழிலாளர் குழுக்கள் மற்றும் கம்பனியின் நிர்வாகம், யூனியன் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கியது.

ஒரு சிறிய வியாபாரத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான தகவல், நிதி ஆலோசனை, வேலை இழப்பால் ஏற்படும் அழுத்ததை சமாளிக்க தனிப்பட்ட ஆதரவு, பயிற்சி சம்பந்தமான தகவல், தொழில் மற்றும் கல்விக்கான ஆலோசனை, வேலை தேட உதவி முதலிய திட்டங்களை, கமிட்டிகள் வடிவமைக்கவும் அமுல்படுத்தவும் செய்கின்றன .

**சமூகம் சார்ந்த சரிப்படுத்துதல்**

சரிப்படுத்துதல் செய்ய ஆலோசனை வழங்கும் திட்டம், சமூகங்கள், தொழிலாளர் சந்தையில் ஏற்படும் மாற்றங்களை எதிர்பார்க்கவும் கையாளவும் உதவுகின்றது. சமூகம் சார்ந்த சரிப்படுத்துதல் செய்யும் கமிட்டிகள் பல்வேறுபட்ட பாதிக்கப்பட்ட சமூகக் குழுக்களால் ஆனவை. இவை வேலை இழந்தவர்களுக்கான சேவைகளை ஒன்று சேர்க்கக்கூடும் (குறிப்பாக பல கம்பனிகள் தங்கள் அளவை சிறிதாக்கியுள்ள இடங்களில்) அல்லது சிறிய குழுக்களுடன் குறிப்பிட்ட தொழிலாளர் சரிப்படுத்துதல் செய்யும் திட்டங்களை ஆரம்பிப்பது அல்லது சமூகம் தழுவிய கேந்திரத் திட்டமிடுதல் என்பவற்றில் ஈடுபடக்கூடும்.

**பாகங்களாலான சரிப்படுத்துதல்**

இன்டஸ்ட்ரி கூட்டுறவுகள், தொழிலாளர் கூட்டுறவுகள், யூனியன்கள் என்பவற்றோடு சேர்ந்து இன்டஸ்ட்ரியின் தேவைகளையும் இலக்குகளையும் இனம்காண பாகங்களாலான சரிப்படுத்துதல் கமிட்டிகள் உருவாக்கப்படலாம். தேவைப்படும் மாற்றங்கள், கிரமப்படுத்தும் வளங்கள் (co-ordinating resources) மற்றும் பாகங்கள் தழுவிய கேந்திரத் திட்டமிடுதலை நோக்குவதன் மூலமும் அமுல்படுத்தப்படும்.

**யார் பங்குகொள்ள முடியும்?**

இடப்பெயர்ச்சி செய்யப்பட்ட வேலையாளுக்கான சரிப்படுத்துதல்: படிவம் 1 சுருக்கம் (Form 1 Summary) மூலம் தொழில் அமைச்சுடன் (Ministry of Labour) அறிக்கை செய்யப்பட்டதும் 50 அல்லது அதற்கு அதிகமான தொழிலாளர்களை உடையதுமான கம்பனிகளின் மூடல் அல்லது அளவில் சிறிதாக்கப்படுதலினால் வேலையை இழந்து பாதிப்புக்குள்ளானவரும் ஒன்டாரியோவை வசிப்பிடமாகக் கொண்டவரும்.

சமூகம் சார்ந்த சரிப்படுத்துதல்: பல கம்பனிகள் மூடப்பட்டு அல்லது சிறிதாக்கப்பட்ட இடங்களில் உள்ள பாதிக்கப்பட்ட பல்வேறு சமூகக் குழுக்கள்.

பாகங்களாலான சரிப்படுத்துதல்: இன்டஸ்ட்ரி கூட்டுறவுகள், தொழிலாளர் கூட்டுறவுகள், வேலை வழங்குபவர்கள் மற்றும் யூனியன்கள் ஆகியவை சேர்ந்து செயற்படுவது.

**சரிப்படுத்துதல் செய்ய ஆலோசனை வழங்கும் திட்டம் என்ற சேவையை நான் எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்?**

மேலதிக தகவல்களுக்கும் ஒரு சரிப்படுத்துதல் செய்ய ஆலோசனை வழங்கும் திட்டத்தின் ஆலோசகருடன் தொடர்பை ஏற்படுத்தவும்,ஆர்வமுள்ளவர்கள் ஒன்டாரியோ முழுவதிலும் இருக்கும் 26 அப்ரெண்டிஷிப் கள அலுவலகம் ஒன்றுடன் தொடர்புகொள்ளலாம். கீழ்க்காணும் இடங்களில் ஒரு சரிப்படுத்துதல் செய்ய ஆலோசனை வழங்கும் திட்டத்தின் அலோசகர்களைக் காணலாம்.

- சட்பெரி (Sudbury)
- சால்ட் சென்ட் மாரி (Sault Ste Marie)
- மிஸ்ஸஸ்ஸாகா (Mississauga)
- ஹமில்டன் (Hamilton)
- வாட்டர்லூ (Waterloo)
- பரி (Barrie)
- டொரொன்டோ (Toronto)
- ஒட்டாவா (Ottawa)
- பெல்வில் (Belleville)
- சாணியா (Sarnia)

1-800-387-5656
(416) 326-5656 (Toronto)

www.ontario.ca/employmentontario

ISBN 1-4249-2457-X